## 1.1 அபிப்பிராயம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

-----------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக ஆணைக்குழுவின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை மின்சார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 81,852,700 தொகையான ஒழுங்குபடுத்தல் கட்டணங்கள் ஆணைக்குழுவிற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கிடைத்திருக்கவில்லை. மேலும் அனுமதிப்பத்திரததாரார்களின் 28 சதவீதமானோரிடமிருந்து 2018 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய ஒழுங்குபடுத்தல் கட்டணம் குறித்துரைக்கப்பட்ட திகதியில் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இலங்கை மின்சார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய காணப்படும் ரூபா 81,852,700 தொகையினை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்த சக்தி அமைச்சின் செயலாளர் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். | பெறவேண்டிய தொகையை அறவிடுவதற்காக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உராய்வு எண்ணெய் விற்பனையாளர் ஒருவரால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,134,697 தொகை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2017 இரண்டாவது அரையாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 5,000,000 தொகையான மதிப்பிடப்பட்ட விலகல் பதிவுக் கட்டணங்கள் 2019 மார்ச் வரை கிடைத்திருக்கவில்லை. | கிரீஸ் பூச்சு மற்றும் உராய்வு எண்ணெய் விற்பனைக்காக அனுமதிப்பத்திரதாரரிடமிருந்து ஆணைக்குழுவிற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 1,134,697 தொகை அந்நிறுவனத்தின் தாய்க் கம்பனியால் ஆணைக் குழுவிற்கு செலுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனை உறுதிப்படுத்து வதற்காக திறைசேரி யிடமிருந்து விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் பதில் கிடைத்ததன் பின்னர் பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதொகை இதுவரை கிடைக்கவில்லை எனவும் அதனை விரைவில் செலுத்துமாறு அறிவித்து அனுப்பியுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். | பெறவேண்டிய தொகையை அறவிடுவதற்காக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 3(1) மற்றும் 3(2) ஆம் பிரிவுகள் | ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் ஏதேனும் குறைவுகள் ஏற்படின் 03 மாதங்களிற்குள் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டிய போதிலும், ஒரு அங்கத்தவர் பதவி 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது | இவ்வெற்றிடத்தை அரசியலமைப்பு சபையின் இணக்கப்பாட்டின் பேரில் வரிசை அமைச்சின் அமைச்சரால் நிரப்பப்பட வேண்டும். அவ்வெற்றிடங்கள் காணப்படுவதாக அமைச்சர் தெரியப்படுத்தப் பட்டுள்ளார். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு | | | |
| | | (i) | ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடாமை | இந்நிறுவவனம் ஒழுங்குபடுத்தல் செயற்பாடு களுக்குரிய ஆணைக்குழுவாக இருப்பதால் அச்செயற்பாடுகளுக்குரிய செயலாறற்ல் மதிப்பீட்டு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) | திட்டவட்டமாக கையளிக்கப்பட்ட பொறுப்புக்களுக்கு காணப்படும் திறன்கள் மற்றும் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக காண்ப்படும் திறன்களுக்கு இடையே விலகலை இனங்காண்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை | ஆதலால் இச்சுறறிக்கையில் காணப்படும் மாதிரியின் பிரகாரமான செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடல் இடம் பெறாமை மேற்கொள்ளப் படவில்லையென தயவுடன் அறிய தருகின்றேன். ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பயிற்சி பட்டறைகளுக்காக அந்த உத்தியோகத்தர்களை பங்கு பெறச் செய்தல் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (iii) | நிறுவனத்திற்கு விசேடமான விசேடமான மனித வளங்கள் திட்டமொன்று தயாரிக்கப்படாமை | பயிற்சியின் பின்னர் அவர்களுக்கு குறித்த பயிற்சிக்கு பொருத்தமான செயற்பாடுகளை கையளிப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| | | (iv) | மனித வளங்கள் திட்டத்தினுள் பதவியணியின் ஒவ்வொரு அங்கத்தவருக்கு குறைந்தது 12 மணித்தியாலயத்திற்கு குறையாத பயிற்சியளித்தல் சந்தர்ப்பமொன்று உறுதிப்படுத்தப்பட வேண்டும். 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக் | எதிர்வரும் ஆண்டிற்காக மனித வளங்கள் திட்ட மொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நிதிஏற்பாடு முற்றம் சேவை அவசியம் மற்றும் உத்தியோகத்தர்களின் வேண்டுகொள் கருத்திற்கொண்டு பயிற்சி தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழுவின் பதவியணியில் 45 உறுப்பினர்களை கொண்டிருந்ததுடன் மொத்த பதவியணியில் 2018 ஆம் ஆண்டில் 14 பேருக்கு பயிற்சி சந்தர்ப்பங்கள் மாத்திரம் அதாவது 31 சதவீததிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | |
| (இ) | 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2017 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2018 மார்ச் 31 ஆந் திகதி தேசிய கொள்கைகள் மற்றும் பொருளதார அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப் பட்டுள்ளதாகவும் 2018.12.03 ஆந் திகதி மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அறிவிக்கப்படவில்லையென தயவுடன் அறிய தருகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 106,029,515 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 111,090,475 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,060,960 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டுடன் ஒப்பிடும் போது முன்னைய ஆண்டின் வருமான அதிகரிப்பு ரூபா 24,871,289 ஆன அதாவது 7.5 சதவீதமாக இருந்த போதும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவினங்களில் அதிகரிப்பு ரூபா 29,932,249 ஆல் அதாவது 14 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கின் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வெறு வருமானங்கள் ரூபா 12,779,629 ஆல் அதிகரித்திருந்ததுடன் அது 128 சதவீதமாக இருந்தது. வட்டி வருமான அதிகரிப்பு, வாகனமொன்றை விற்பனை செய்தமையால் கிடைத்த தொகை மற்றும் மானியம் - (மீண்டுவருபவை) ஆகிய உருப்படிகள் வருானத்தின் அதிகரிப்பிற்கு தாக்கமளித்திருந்தது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது எழுதுகருவிகளுக்கான செலவினம் ரூபா 738,778 ஆல் அதாவது 101 சதவீதத்தினாலும் சட்டம் ஆராய்ச்சி செலவினம் ரூபா 560,856 ஆலும் அதாவது 35 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவின் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கி மேர்ச்சன்ட் டவர் சட்டத்தின் 06 ஆம் மாடியின் அலுவலக வளவிற்கு மேலதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் 2017 யூலை 01 ஆந் திகதி முதல் அமுலாகும். வகையில் 17 ஆவது மாடியில் அலுவலக வேலைகளுக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு போதும் குறித்த செயற்பாடு 2019 ஏப்ரல் மாதம் வரை ஆரம்பிக்கப்படாமையினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 05 மில்லியன் விளைத்திறனற்ற வகையில் செயற்படுத்த நேர்ந்தது. | பெற்றோலியம் மற்றும் நீர் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாடும் இந்த ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டதால் 6 ஆவது மாடியில் இடவசதிகள் போதியதாக இல்லாமையால் அலுவலகத்திற்குள்ளே அமைந்துள்ள கட்டிடத்தில் இட வசதிகளை பெற்றுக் கொள்வது பொருத்தமானதெனவும் 17 ஆம் மாடியிலிருந்து ஒரு பகுதி மாத்திரம் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. பெற்றோலியம் மற்றும் நீர் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் கைத்தொழிலுக்குரிய சட்டம் வரைவாக்கப் பட்டிருந்த போதும் நிறைவேற்றிக் கொள்ள இதுவரை முடியாதிருந்தமை ஏற்றுக் கொள்கின்றேன். 17 ஆவது மாடி அலுவலக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) உராய்வு நீக்கிகளை விற்பனை செய்பவர்கள் அரையாண்டில் தமது மொத்த விற்பனை பட்டியலின் பெறுமதியில் ஆணைக் குழுவிற்கு செலுத்த வேண்டிய பணத்தை சரியான விற்பனை பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கொடப்பனவு செய்யப்பட்டுள்ளதா உன்பதை உறுதிப்படுத்தும் | உராய்வு நீக்கிகளை விற்பனை செய்யும் அனுமதி இக் கட்டணங்களை கணிப்பீடு செய்யும் போது விற்பனை பெறுமதியையே அடிப்படையாக கொண்டிருந்ததுடன் விற்பனை பெறுமதியை கணக்காய்வினால் உறுதிப்படுத்தி அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றோம். | அறவிடப்படுகின்ற கட்டணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

நடைமுறையொன்று ஆணைக்குழு செயற்படுத்தியிருக்கவில்லை. இதற்கு முன்னரும் கணக்காய்வு விசாரணை மூலம் இந் நிலைமை சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் 13 நிறுவனங்களில் 2 நிறுவனங்கள் மாத்திரம் 2018 ஆம் ஆண்டிற்காக விற்பனை அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை மின்சக்தி துறையில் ஒழுங்குபடுத்தி நடவடிக்கை தொடர்பாக ஆணைக் குழுவிற்கு அதிகாரமளிக்கப் பட்டிருந்த போதும் இலங்கை மின்சார சபை ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் ஒழுங்கு பின்பற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் ஆணைக்குழுவினால் அந்த நிலைமை சரிப்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றதன் பிரகாரம் அவதானிக்கப்பட்டன. | இலங்கை மின்சக்தி துறையில் ஒழுங்குபடுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை மற்றும் ஒழுங்குகளுக்கு இலங்கை மின்சார சபை கவனம் செலுத்தாத சந்தர்ப்பங்கள் மற்றம் ஒழுங்கு ஆலேசணைகள் பின்பறற்ப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதாக ஏற்றுக்கொள்கின்றேன் | ஆணைக்குழுவிடமுள்ள அதிகாரங்களை செயற்படுத்தி ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை முறைமைபடுத்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். |
| (i) வழங்கல அனுமதிப்பத்திரத்தை உடையோரால் ஆணைக்குழுவிற்கு 06 மாதங்களுக்கு ஒரு முறை மதிப்பிடப்பட்ட மொத்த வழங்கல் கூறு விலை சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 யூன் மாதத்தின் பின்னர் மின்சார சபையினால் அக்கூறுவிலை சபைக்கு சமர்ப்பிக்கப்படாமை. | மதிப்பிடப்பட்ட இருப்பு வழங்கல் கூறுவிலை உச்சஅளவு முதல் ஆணைக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப் படாமையால் கூறுவிலைகள் அங்கீகரிக்க முடியவில்லை | - மேற்படி - |
| (ii) இணைப்பு மற்றும் விநியோக அனுமதிப்பத்திரதாரார்கள் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளவாறான வருமானம் மற்றும் கிரய தரவுகள் | 2018 சனவரி முதல் 2019 இது வரை உள்ளவாறான வருமானம் மற்றும் கிரய தரவுகள் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டு ஆணைக்குழு காலரீதியாக ஒரே சீரான தேசிய இறுப்பனவு சீராக்கல் (Uniform National Tarift Adjustmant) தயாரிக்கப்பட்டு அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு தொடர்பு படுத்தப்படுவதுடன் இலங்கை மின்சார சபை 2018 சனவரி மாதம் முதல் தேவையான தரவுகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்காமை. | வழங்கப்படாமையால் காலாண்டு ரீதியாக விலை சீராக்கல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிட முடியாமல் இருந்தது. | |
| (iii) | இணைப்பு மற்றும் விநியோக அனுமதிப்பத்திரதாரர்களால் மின் கட்டணங்கள் தவிர மின்வழங்கல் தொடர்பாக ஏனைய சேவைகளுக்காக எதிர்வரும் ஆண்டின் போது அறவிடப்படும் கட்டணங்கள் மற்றும் கணக்கிடல் ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 15 இற்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ளவேண்டிய போதிலும் மின்சார சபை 2018 ஆம் ஆண்டின் போது 2019 ஆம் ஆண்டிற்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்ற்காக கட்டணங்களை அங்கீகரிப்பதற்காக உரிய அனுமதிப்பத்திரதாரகளால் அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டணங்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கி அங்கீகரித்து கொள்ள வேண்டிய போதிலும் அவ்விபரங்களை வழங்காமையால் ஆணைக்குழுவிற்கு அந்த அனுமதிப்பத்திர உடமையாளர்களின் கட்டணங்களை அங்கீகரிக்கும் இயலுமை இல்லையென அறியத் தருகின்றேன். | - மேற்படி - |
| (iv) | ஆணைக்குழுவினால் இலங்கை மின்சார சபைக்கும் இலங்கை மின்சார தனியார் கம்பனிக்கும் (LECO) மின்சாரம் தொடர்பான செயற்பாடுகளின் போது இடம்பெறும் விபத்துக்கள் அறிக்கையிடல் கணனி மயப்படுத்தப்பட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கை மின்சார சபை 2018 மே மாதத்தின் பின்னர் இம் முறைமைக்கு தரவு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சாரம் தொடர்பான செயற்பாட்டின் போது இடம் பெறும் விபத்துக்களை அறிக்கையிடுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த அறிக்கையில் கணனி மயப்படுத்தப்பட்ட முறைமைக்கு இலங்கை மின்சார சபையினால் தரவுகள் உள்ளடங்குவதை தவிர்க்கப்பட்டமையால் அந்த விபத்துக்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கை எடுக்க முடியாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதாக அறிய தர விரும்புகிறேன். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (v) 2018 ஆம் ஆண்டில் மதியுரை நிறுவனத்தின் உதவியுடன் ரூபா 2.54 மில்லியன் செலவில் பாவனையாளர்களுக்கு மின் இணைப்பிணை வழங்குதல் மற்றும் மின்வழங்களுக்குரிய உடன்படிக்கை, விண்ணப்பங்கள் மற்றும் அது தொடர்பாக வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. கருத்தினை கேட்பதற்காக பல கட்டங்களில் இலங்கை மின்சார சபைக்கு கலந்துரை யாடுவதற்காக சமூகமளிக்குமாறு ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் ஒரு கூட்டத்திற்காக மாத்திரம் சமூகமளித்திருந்தமை. | மின் பாவனையாளர் களின் வசதிகள் கருதி பாதுகாப்பிற்காக பொருத்தமான வழிகாட்டல்கள் தயாரிப்பதற்காக இந்த அனுமதிப்பத்திரமுடையோர்க ளின் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் சமர்ப்பிப்பதற்காக சந்தர்ப்பத்தை வழங்கியிருந்த போதும் அக்காலத்துரையாடலுக்காக இலங்கை மின்சார சபை சமூகமளிப்பதனை தவிர்த்திருந்தமையமால் அதிலிருந்து எதிர்பார்த்தன் பிரகாரம் கலந்துரையாடல் மற்றும் இணக்கத்தின் மூலம் இணங்கும் வகையில் பாவணையாளர் சலுகைகளை வழங்கும் மூலம் இயலுமை தவிர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்க விரும்புகிறேன். | - மேற்படி - |

**3.3 செயற்திட்டங்கள் / மூலதன வேலைகளில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த 05 ஆண்டுகளால் மேற்கொள்ளப்பட்ட மதியுரை சேவையின் உடன்படிக்கை களுக்குரிய செயற்பாடுகளின் முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது இலங்கை மின்சார சபையினால் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய தகவல்களை வழங்காமையால் பின்வரும் செயற்திட்டங்களில் செயற்திறன் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | ஆணைக்குழுவிடமுள்ள அதிகாரங்களை செயற்படுத்தி ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை முறைமைபடுத்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். |
| (i) ரூபா 10.2 மில்லியன் செலவில் செயற்படுத்தப்பட்டிருந்த மின் வழங்கல் மற்றும் விநியோக கிரயத்தை குறைக்கும் இயலுமையுடைய மின் வழங்கல் மற்றும் விநியோக கிரயத்தை குறைக்கும் செயற்திட்டம். | (i) விநியோக கிரயத்தை குறைந்த மட்டத்தில் தீர்மானித்தல் (BENCH MARKING TRANSMISSION & DISTRIBUTION COST)<br>இச் செயற்திட்டத் | மதியுரை சேவைகளிலிருந்து எதிர் பார்க்கப்பட்ட பெறுபேறு களை பெற்றுக் கொள்வதற்குரிய தரவு களை வழங்குவதற்காக முறையான நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | திலிருந்து மின் இணைப்பு மற்றும் வழங்கல் கிரயத்தை குறைக்கும் இயலளவு காணப்பட்ட போதும் இலங்கை மின்சார சபைக்கு தேவையான மதிப்பிடப்பட்ட தரவுகளை வழங்காமையால் செயற் பாடுகளை எதிர்பார்த்த காலப் பகுதியில் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது | |
| (ii) | குறைந்த கிரயத்தின் கீழ் இணைப்பு அனுமதிப்பத்திர தாரர்கள் உற்பத்தி அனுமதிப்பத்திரதாரரிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்தா என பரீட்சிப்பதற்கான ரூபா 12 பெறுமதியான Develop Dispatch Audit Guide lines செயற்திட்டம் | (ii) வழங்கல் கணக்காய்வு வழிகாட்டல் தயாரித்தல்<br><br>Develop Dispatch Audit Guide lines செயற்திட்டம் மதியுரை கம்பனியால் கணக்காய்விற்கான தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் மாதிரி படிவங்கள் மற்றும் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மின்சார சபை அந்த மாதிரிப் படிவங்களை பூர்த்தி செய்து அனுப்பாமையால் செயற்பாட்டை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. | - மேற்படி - |
| (iii) | எதிர்கால மின்சாரத்தின் விலை தொடர்பாக கொள்கை யொன்றை தயாரிப்பதற்காக பொருந்தும் சூத்திர செயற்திட்டம் | (iii) கட்டண சூத்திர செயற்திட்டம் (Tarriff Formulation) எதிர்கால மின்சாரத்தின் விலை தொடர்பாக கொள்கை யொன்றை தயாரிப்பதற்காக பயன் படுத்துவதற்கு தேவையான தரவுகள் மற்றும் தகவல்கள் மின்சார சபையிடமிருந்து கோரப்பட்டிருந்த போதிலும் அத்தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டின் இடை நிறுத்த வேண்டியேற்பட்டது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iv) | பகுதியளவு வருடாந்த வழங்கல் அனுமதிப்பத்திர உடமையாளரின் மதிப்பிடப்பட்ட இருப்பு வழங்கல் கூறு விலையை அங்கீகரிப்பதற்கான Study On Generation Cost Benchmarking செயற்திட்டம் | (iv) பிறப்பாக்க கிரயம் குறைத்தல் தொடர்பான ஆய்வு Study on Generation Cost Bench marking) இணைப்பு அனுமதிப்பத்திரமுடை யோர்களின் மதிப்பிடப்பட்ட மொத்த வழங்கல் விலை பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அதற்குரிய விபரங்கள் இலங்கை மின்சார சபை வழங்காமையால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | - மேற்படி - |
| | (v) | இலங்கையின் மின்சார முறைமையின் நிலைத்திரு தன்மை தொடர்பாக ஆய்வொன்று (Net work Stability study) மேற்கொண்டு மதியுரை கம்பனியால் தனது இறுதி அறிக்கையில் இலங்கையில் காணப்படும் மின்சத்தி முறைமையின் நிரந்தர தன்மை காணப்படும் பலவீனங்கள் மற்றும் அப்பலவீனங்களை குறைப்பதற்காக பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மின்சார சபையிடமிருந்து தகவல்கள் கிடைக்காததன் பேரில் வெற்றி தோல்வி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | (v)இலங்கையின் மின்சார முறைமையின் நிலைத் திருதன்மை தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்ட போதும் (Net work Stability Study) ஆணைக்குழுவின் பரிந்துரை செயற் படுத்தப்பட்டதா என்ற பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு மின்சார சபையினால் தகவல் அனுப்பிவைக்கப்பட வில்லை | - மேற்படி - |
| (ஆ) | அனுமதிப்பத்திரதாரரின் பாதுகாப்பினை நோக்காக கொண்ட பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ திட்டமொன்று தயாரிப்பது தொடர்பாக மதியுரை சேவை வழங்குவதற்காக ஆணைக்குழு பல்கலைக்கழகமொன்றை தெரிவு செய்து 2018 ஏப்ரல் 16 ஆந் திகதி ரூபா 7.75 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | - |

| | | | |
|---|---|---|---|
| (i) | 2007 ஆம் ஆண்டின் தேசிய பெறுகை முகவராண்மை மூலம் வழங்கப்படும் மதியுரையாளர்கள் தெரிவு மற்றும் சேவையில் ஈடுபடுத்தல் வழிகாட்டல் கோவையின் 9.51 மற்றும் 9.52 பந்திகளின் பிரகாரம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட மதியுரை நிறுவனத்துடன் ஆணைக்குழுவினால் முறையான உடன்படிக்கை யொன்று கையொப்பமிட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த கையளிப்பு கடிதத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கும் இணக்கப்பாட்டின் பேரில் உடன்படிக்கை உருவாகுவதால் வேறான உடன்படிக்கையொன்று கைச்சாத்தப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | இச் செயற்பாட்டிற்குரிய அண்மித்த செயற்பாடுகள் (Terms of Reference) இன் பெறுகை கால கட்டளையின் பிரகாரம் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம் திட்டங்கள் 5 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2019 மார்ச் 15 அந் திகதி வரை மதியரை திணைக்களத்தினால் குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கான தரவுகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக மின்சார சபையின் மின்நிலையம் மற்றும் ஏனைய வளவுகளுக்கு செல்வதற்கு அனுமதி கிடைக்காமை அடிப்படையில் இதனை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(டீ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம் புதிய பதவியணியினரின் நிறுவனக் கட்டமைப்பு திருத்தப்பட்டு அது பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்கபடுத்தல் நிறுவனமொன்றான இந்த ஆணைக்குழுவின் பதவியணியின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2002 இன் 35 ஆம் இலக்க சட்டத்தின் (1)12 ஆ பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவி உயர்வுகளிற்காக பொருத்தமான நடைமுறையொன்று காணப்பட வேண்டு மென்பதுடன், அந்த நடைமுறைக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சிற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் வேறு அங்கீகார மொன்று பெற்றுக் கொள்ளும் தேவைப் பாடொன்று உருவாக வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினா் எண்ணிக்கை 51 ஆனதுடன், உள்ளபடியான எண்ணிக்கை 43 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 08 ஆக இருந்தது. உள்ளடங்கியிருக்காத இரண்டு சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள், 3 மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு முதல் நிலை உத்தியோகத்தர்கள் என்ற வகையில் 07 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 51 ஆனதுடன், உள்ளபடியான எண்ணிக்கை 43 ஆக இருந்தமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிலிருந்து விலகி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படவில்லை என தயவுடன் அறிய தருகின்றேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதியணியனரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஆணைக்குழுவின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிராரம் 08 துறைகளுக்குரிய 21 செயற்பாடுகளின் செயன் முன்னேற்றம் ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அந்நிலைமை ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த செயலாற்றலில் பாதகமாக தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. | அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான தரவுகள் அனுமதிப்பத்திர தாரர்களால் வழங்காமை மற்றும் பெறுகை செயற்பாடு களுக்காக தேவையான குழு நியமிக்கப்பட்டி ருக்கை யில் அமைச்சின் செயற்பாடுகள் மாற்றப்பட்டதன் பேரில் தாமதமே இதற்கான காரணமாக இருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில் முகாமைத்துவும் கவனம் செத்த வேண்டும். |